**கொழும்பை அண்டிய புகையிரதச் செயற்திட்டத்தின் கீழ் செயற்படும் போக்குவரத்துச் செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதியின் - 2022**

---

கொழும்பை அண்டிய புகையிரதச் செயற்திட்டத்தின் கீழ் செயற்படும் போக்குவரத்துச் செயற்திட்ட தயார்ப்படுத்தல் வசதியின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 ஒக்தோபர் 28 ஆம் திகதிய 3425 எஸ்ஆர்ஜ (எஸ்எவ்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 04.03(அ) பிரிவிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், போக்குவரத்து அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவுள்ளதுடன் இலங்கைப் புகையிரதத் திணைக்களம் செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது. முன்னுரிமை போக்குவரத்துச் செயற்திட்டங்களின் தயார்நிலையை மேம்படுத்துவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும். மேம்படுத்துவதற்காக களனிப்பள்ளத்தாக்கு புகையிரத வரிசையை வடிவமைப்பதற்கான மதியுரை சேவைகளை வழங்குதல் எனும் பெயரிலான ஒரு கூறின் கீழ் செயற்திட்ட நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன.

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 1,654.54 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 11.36 மில்லியன் தொகையானதுடன் இதில் ரூபா 1,456.50 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 9.99 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 198.04 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியிடப்படுகின்றது.

செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 ஒக்தோபர் 28 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2022 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செலவினக் கூற்றையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக்குறைபாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| ADB இனால் பராமரிக்கப்படுகின்ற பதிவின்படி ஐ.அ.டொ. 513,108.43 2022 டிசம்பர் 31 இல் வட்டியாக செலுத்தப்பட வேண்டும். இருப்பினும் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவினால் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி அது ஐ.அ.டொ. 380,000 எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே நிதிக் கட்டணம் ரூபா 45.4 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொ. 133,108 நிதிக்கூற்றுக்களில் குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | 2023 ஆம் ஆண்டின் செயற்திட்ட நிதிக்கூற்றுக்களின் கீழ் மீதமுள்ள கடன் வட்டிக் கட்டணங்கள் கணக்கிடப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |

## 3. பௌதீக செயலாற்றல்

### 3.1 ஒப்பந்த நிர்வாகம்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | களனி பள்ளத்தாக்கு புகையிரத பாதை பகுதியில் வசிக்கும் குடும்பங்களினை மீள்குடியேற்றுவதற்கு குடியிருப்பு அடுக்குமாடி அலகுகள் நிர்மாணமானது செயற்திட்ட மேற்பார்வையின் கீழ் வராதாயினும் , களனி பள்ளத்தாக்கு புகையிரத பாதை பகுதியில் வசிக்கும் குடும்பங்களை மீள்குடியேற்றும் நோக்கத்திற்காக இலங்கை அரசினால் நிதியிடப்பட்ட ரூபா 5,412 பெறுமதியான 1,244 வீட்டு அலகுகளை நிர்மாணிப்பதற்கான ஆறு புரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்கு அமைவாக செயற்திட்ட அலுவலகம் மற்றும் உள்ளூராட்சி அபிவிருத்தி அதிகார சபைக்கிடையில் கையொப்பமிடப்பட்டது. 2022 டிசம்பர் 31 இல் இச்செயற்திட்டமானது முடிவடைந்திருந்ததுடன் எனினும், 560 வீட்டு அலகுகள் மாத்திரமே அத்திகதியில் மீள்குடியேற்ற நோக்கத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 45 சதவீதமாக இருந்ததால், இலக்கிடப்பட்ட செயலாற்றல் அடையப்படவில்லை. | தேவையான நிதி உரிய நேரத்தில் திறைசேரியிடமிருந்து பெறப்படாமை மற்றும் நடைமுறையில் உள்ள கோவிட் 19 பாதிப்புக்கள் போன்றன பௌதீக முன்னேற்றம் தாமதமடைந்தமைக்கான காரணங்கள் ஆகும்., | அமைச்சரவை அங்கீகாரத்திற்கு அமைவாக கட்டுமானமானது தாமதமின்றி பூர்த்தியாக்க வேண்டும். |
| (ஆ) | ஆசிய அபிவிருத்தி வங்கியானது அடுத்த 20 ஆண்டுகளில் தேசிய போக்குவரத்து முறையை வலுப்படுத்துவதற்காக கொழும்பு புறநகர்ப் பகுதிகளில் இலங்கை புகையிரதத்தின் அபிவிருத்திக்காக ரூபா 1,506 மில்லியனுக்கு சமமான ஐ.அ.டொ. 8,396,696 ஐ வழங்கியிருந்ததுடன் 2022 டிசம்பர் 31 இல் சாத்தியக்கூறு ஆய்வுகள் | TPPF இன் கீழ் வெளியீடுகள், சாத்தியக்கூறு அறிக்கைகள், விரிவான வடிவமைப்பு அறிக்கைகள் மற்றும் கொழும்பு புறநகர் பகுதியின் நான்கு ரயில் பாதைகளுக்கான ஏல | புகையிரத பாதை அபிவிருத்திக்கான செயற்திட்டத்தை மிக விரைவாக உருவாக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| மற்றும் விரிவான திட்டங்களுக்கான ஆலோசனை சேவைகளுக்காக ரூபா 1,447 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் , மேலும் மேற்படி கடன் தொகைக்கான நிதிச் செலவாக ஐ.அ.டொ. 513,108 செலுத்தப்பட்டது. செயற்திட்டம் 2021 மார்ச் இல் முடிக்கப்பட்டது மற்றும் சாத்தியக்கூறு ஆய்வு மற்றும் விரிவான வடிவமைப்பு அறிக்கைகள் வரிசை அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் இரண்டு வருடங்களுக்கு மேலாக குறித்த அறிக்கைகள் புகையிரத திணைக்களத்தில் இருந்த போதிலும், மேற்படி அறிக்கைகளைப் பயன்படுத்தி புகையிரத அமைப்பை அபிவிருத்தி செய்வதற்கான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. | ஆவணங்கள் என்பன 2021 ஏப்ரல் 30 இல் பெறப்பட்டிருந்ததுடன் அவை SLR, NPD மற்றும் போக்குவரத்து அமைச்சிடம் தேவையான மேற்கொண்ட நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளன. | |

**3.2 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| | மீள்குடியேற்ற நடவடிக்கைகள், ஸ்மாரட் நுழைவுச்சீட்டு மற்றும் ஆசன முன்பதிவு முறைமை மற்றும் புகையிலத செயற்திறன் மேம்பாட்டுத் திட்ட நடவடிக்கைகள் செயற்திட்ட நோக்கத்தின் முன்னோட்டத்தின் கீழ் வரவில்லை. எனினும் காலத்துக்கு காலம் அமைச்சரவை தீர்மானங்களின் ஊடாக அந்நோக்கங்கள் இணைக்கப்பட்டுள்ளன. செலவின அறிக்கையின்படி, பின்வரும் செலவுகள் செயற்திட்டச் செலவுகளாக கருதப்படடுள்ளன. | மேலும் சில நடவடிக்கைகள் அடையாளம் காணப்பட்டு, ADB அவர்களுக்கு நிதியுதவி அளிப்பதற்கு ஒப்புக்கொண்டது. அதன்படி, REIP திட்டம் உருவாக்கப்பட்டது மற்றும் TPPF இலிருந்து நிதியைப் பயன்படுத்தி பூர்வாங்க பணிகள் செய்யப்பட வேண்டும். | செயற்திட்ட செயற்பாடுகளின் நோக்கெல்லை மீளாய்வு செயயப்பட்டு செயற்திட்ட நிர்வாக கையேட்டின்படி செலவுகள் செய்யப்பட வேண்டும். |
| (i) | ஸ்மார்ட் நுழைவுச்சீட்டு மற்றும் ஆசன முன்பதிவு முறைமைக்கான ஆலோசனை சேவையை வழங்குவதற்காக தனியாள் ஆலோசகருக்கு மொத்தம் ரூபா. 19.21 மில்லியன் ADB நிதியிலிருந்து செலுத்தப்பட்டுள்ளது. | | |
| (ii) | சமூக ஆய்வினை நடத்துவதற்கும் மீள்குடியேற்ற திட்டத்தை தயாரிப்பதற்கும் யுஎன்-ஹெபிடட் இற்கு 2022 டிசம்பர் 31 அளவில் உள்நாட்டு நிதியிலிருந்து மொத்தம் ரூபா 150.60 மில்லியன் ஏற்கனவே செலுத்தியும் மற்றும் ரூபா. 20.08 மில்லியன் செலுத்த வேண்டியும் உள்ளது | | |
| (iii) | புகையிரத செயற்திறன் மேம்பாட்டு செயற்திட்டத்திற்காக வெளிநாட்டு ஆலோசகர் ஒருவருக்கு ரூபா. 2.89 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளது. . | | |

## 3.3 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| கொழும்பை அண்டிய புகையிரத செய்திட்டத்தின் செயற்திட்ட முகாமைத்துவ அலகின் மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொ. 500,000 ஆகும். எனினும், செயற்திட்ட முகாமைத்துவ அலகானது ஐ.அ.டொ. 665,351 இனை செலவளித்துள்ளதுடன் இது ரூபா. 30.8 மில்லியனுக்கு சமனான ஐ.அ.டொ. 165,351 ஆல் காலப்பகுதிக்காக எதிர்வுகூறப்பட்ட ஐ.அ.டொ. 500,000 இனை விஞ்சியுள்ளது. . | போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் செயலாளரால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி, அவர்களின் PMU செலவு சேமிப்பை புகையிரத கூறுகளுக்கு மறு ஒதுக்கீடு செய்வதற்கு சாலை கூறுகளிலிருந்து ஆரம்ப ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. | திட்ட நிர்வாக கையேட்டின் படி செலவுகள் செய்யப்பட வேண்டும். |